# சத்தியம்

விலை சதம் 10

சகலவிதமான
மோட்டார் ட்றக்ரர்,
உப உறுப்புகள்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ஈஸ்வரீ
மோட்டார் ஸ்ரோர்ஸ்
8/4, ஸ்ரான்லி ரேட்,
யாழ்ப்பாணம்.

"எங்கள் உழைப்பெல்லாம் இந்த நாட்டில் உள்ளவர்க்கே"

ஆணை 1 | [ஆகஸ்ற் 15 1970] | பணி 1

# மாவிட்டபுரத்தில் நாம் யாருக்கு விழா எடுக்கிறோம்? முருகனுக்கா? சூரனுக்கா?

இருபதாம் நூற்றுண்டின் இந்தக் காலக்கட்டத்தில் இந்து சமயத்தின் பெயரில் தமிழ்ப்பகுதியாகிய மாவிட்டபுரத்திலுள்ள முருகன் கோயிலில் நடத்தப்பட்டுவரும் கதவடைப்பு நிகழ்ச்சிகளும் எதிர் நிகழ்ச்சிகளும் தமிழ் மக்களைப்பற்றியும் இந்துசமயத்தைப்பற்றியும் பிறரிடம் பிழையான ஓர் அபிப்பிராயத்தை வளர்த்து வருவதற்கே உதவுகின்றன.

தெற்கிலுள்ள சிங்கள அன்பர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்?

"தமிழர்களும் இந்துக்களும் இந்தளவு பிற்போக்கானவர்களா? இறைவனின் பெயரில் தங்கள் சொந்த இனத்தவர்களையே தள்ளிவைக்கும் இவர்கள் எப்படி மொழியுரிமைபற்றியும் அரசியல் உரிமைகள்பற்றியும் மனச்சாட்சியோடு கேட்கலாம்?" என்றுதான் சிங்கள அனபர்கள் நினைப்பார்கள், நினைக்கிறுர்கள். அந்த நினைவு அவர்களுக்கு தாங்கள் செய்யும் தவறுகளையுங்கூட அற்பமாகக் காட்டி அவர்களது மனச்சாட்சியின் குத்தலையே மழுப்ப உதவி விடுகின்றது. "தமிழர்கள் தங்களுக்குத் தாங்களே செய்யாத அடக்குமுறையையா நாம் அவர்களுக்குச் செய்கிறோம்?" என்று ஒரு சிங்கள மகன் திருப்பிக் கேட்டால் நாம் என்ன சொல்லலாம்? அவன் சொல்வது சரியாக விருப்பதால் அவன் தனது தவறைத் தட்டிக்கழிப்பதற்கும் நாமே உதவுகிறோம்.

வெளிநாட்டவர்களுக்கு இந்த மாவிட்டபுர விவகாரம் எப்படிப் படுகிறதோ தெரியாது. ஆனுல் நிச்சயமாக அமெரிக்கர் நீக்கிரோக்களை நடத்தும் முறைகூட இதைவிட அநாகரிகமானதல்ல என்றுதான் நினைப்பார்கள். காரணம் நாமோ நிறத்தாலோ, மொழியாலோ இனத்தாலோ வேறுபடாத நம்மையொத்த மக்களையே இறைவனின் பெயரில் இறைவனின் ஆலயத்திலேயே தள்ளிவைக்கிறோம். அந்தளவு அக்கிரமத்தை அமெரிக்கர் கூடச் செய்வதில்லை.

இந்த அநாகரிகமான பிற்போக்குத்தனத்தை, அக்கிரமத்தை, தன்னிகரில்லாத மனச் சாட்சிக் கொலையை மற்ற உயிர்களைக் கொலை செய்யக்கூடாது என்று சைவம் பேசும், அகிம்சை பேசும் நாம் இந்துசமயத்தின் பெயரிலும் அதன் வேதங்களின் பெயரிலும் தர்ம சாஸ்திரங்களின் பெயரிலும் செய்கிறோம்! எத்தனை முரண்பாடு!

வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் இந்த அக்கிரமங்களுக்கு இடமளிக்கின்றனவா? இந்த இருபதாம் நூற்றுண்டிலும் இத்தகைய பிற்போக்குச் சடங்குகளைப் பின்பற்றத் தூண்டுகின்றனவா?

சிலர் அப்படிச் சாட்டுக் காட்டுவதுமுண்டு. சாத்தான் கூட வேதத்தைச் சாட்சிக்கு இழுக்கலாம். எனவே "அதுவே நீ ஆவாய்" என்று கூறும் வேதத்தை விளங்கிக்கொள்ள நம் மனச்சாட்சியிடமிருந்தே பாடங்கேட்க வேண்டும்.

மனச்சாட்சி என்ன கூறுகிறது?

நமது மனச்சாட்சி, நமது சமூகத்தின் மனச்சாட்சி இன்றைய இருபதாம் நூற்றுண்டு விஞ்ஞான உலகின் மனச்சாட்சி "தாழ்த்தப்பட்ட சாதியினர்" என்ற ஒரு பிரிவைத் தனியாக ஒதுக்கித் தாழ்த்தி வைத்திருப்பதும் அவர்களை இறைவனின் ஆலயங்களுக்குள்கூட அநுமதிக்காமல் தள்ளி வைத்திருப்பதும் சரியானது என்று கூறுகிறதா? நமது மனச்சாட்சியும் சமூகத்தின் மனச்சாட்சியும் அவற்றைக் குற்ற உணர்வின்றிப்பார்த்திருக்கிறதா? அனுமதிக்கிறதா?

இல்லை. அவை பெருந்தவறுகள் என்று சதா சுட்டிக்காட்டுகிறது. நாம் பெரிய துரோகம் செய்கிறோம் என்று குத்திக் குத்திக் காட்டுகிறது. இருப்பினும் நாம் ஏதோ ஒரு பொய்ச்சாட்டுக் காட்டிச்சமாளித்து விடுகிறோம். அவை எல்லாம் மெல்ல மெல்லப் போய் விடும் என்று தட்டிக்கழிப்போம். அல்லது வாயளவில் ஏதாவது பேசிவிட்டு செய்யத் துணிவின்றி, செய்யத் தெரியாது பிரச்சனைகளைக் கடத்திவருகிறோம். அப்படிச் செய்வதால் நமது மனச்சாட்சியின் தீர்ப்பை நமது தாமதகுணத்தால் மறைத்து விடுகிறோம். சமூகத்தின் தாமதகுணத்துக்கே நமது மனச்சாட்சியைப் பலியிடுகிறோம். அப்படிச் செய்வதால் நாமும் நமது சமூகமும் முற்போக்காகச் செல்லாமல் தாமதகுணத்தால் ஆட் கொள்ளப்பட்டு பழைய தடத்திலேயே வாழ்க்கையை நிறுத்திவிடுகிறோம். தேக்கம், தேக்கம். அந்தத் தேக்கம் பிற்போக்குச் சக்திகளுக்கே இடமளிக்கின்றது. காலப்போக்கில் நம் மனத்திலும் சமூகத்திலும் அந்தப் பிற்போக்குச் சக்திகளே சர்வாதிகாரம் செய்ய நாம் இடமளிந்துவிடுகிறோம். சாதிப் பிரிவினைகளைச் சத்தம் போட்டு அழுத்துபவர்களும்' மனக்குத்தலில்லாமல் அந்தப் பிற்போக்குச் சம்பிரதாயங்களையும் சடங்குகளை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## சத்தியம் பத்திரிகையின் புதிய பெரும் பிறப்பு

இவ்வருடம் இலங்கையின் சுதந்திர தினத்தோடு ஆரம்பிக்கப்பட்ட சத்தியம் பத்திரிகை தேர்தலுக்குப் பின் இடையில் நின்றுவிட்டு இன்று திரும்பவும் இந்திய சுதந்திரதினத்தன்று வெளிவருகிறது. இவ் வெளியீட்டையே சத்தியம் பத்திரிகையின் இரண்டாம் பிறப்பின் முதல் வெளியீடு எனலாம். ஒரே பிறவியில் இரண்டாம் பிறப்பு; ஞானப்பிறப்பு.

இந்திய சுதந்திரதினம் நம்மைப் பொறுத்தவரையில் ஓர் நாட்டின் சாதாரண சுதந்திரதினமாகத் தெரிவதில்லை. ஓர் கருத்தின் புதிய பிறப்பாகவும், அந்தக் கருத்தை ஏந்திய ஓர் புதிய யுகத்தின் பிறப்பாகவுமே இந்திய சுதந்திரத்தை நாம் காண்கிறோம். காந்தியின் போராட்டம் அந்தக கருத்தின் புதுப்பிறப்புக்குரிய ஆரம்பப் போராட்டமேதான். சுதந்திர மடைந்த ஸ்ரீலங்கா எந்தக் கருத்தை இனிமேல் வளர்க்கப் போகிறதோ அந்தக் கருத்தினதும் அதற்குரிய யுகத்தினதும் சின்னமே இந்தியாவாகும். இந்தியா எனும்போது சாதாரண ஓர் நாட்டை மட்டும் நாம் காணவில்லை. அரவிந்தர் விவேகானந்தர் கண்ட காலங்கடந்த அமர இந்தியாவையே நாம் கருதுகிறோம், காண்கின்றோம்.

"India is an Idea, a Truth, a Spirit' என்கிறுர், அரவிந்தர். "'Mother India is the Mother of the world"

"இந்தியா என்பது ஓர் கருத்தாகும், ஓர் உண்மையாகும், ஓர் ஆன்மாவாகும்" "அன்னை இந்தியாவே அகிலத்தினதும் அன்னையாவாள்.'

அந்தக் கருத்து, அந்த உண்மை, அந்த ஆன்மா விடுதலை பெற்ற சுதந்திரதினமொன்றில் 'சத்தியம்' பத்திரிகை திருப்பவும் வெளிவருகிறது. அமர இந்தியா எனும் அந்தக் கருத்தே 'சத்தியம்' பத்திரிகை தெரிவிக்கும் சத்தியமாக இனிமேல் இருக்கும். அதுவே அன்னை ஸ்ரீலங்கா அகிலத்துக்குக் காட்டப்போகும் தர்மமாகவும் இருக்கும்.

தத்துவம அசி

அந்தக் கருத்து என்ன? அந்த சத்தியம் எது?

' அதுவே நீ ' - அதுதான்; ' தத்துவம் அசி '

நீ எதுவோ அது. நிர்வாண போதிஞானம் எதுவோ அது. அகத்தே தேவராச்சியமாக எது இருகிறதோ அது. அதுவே நீ;

ஆனுல் பழைய சமயங்கள் இன்று செய்வதுபோல் அந்தக் கருத்தை யந்திரரீதியாக அழுத்துவதல்ல நமது நோக்கம். அக் கருத்தைக் காலத்துக்கேற்ற மாதிரி ஆக்கரீதியாகவும் விஞ்ஞானரீதியாகவும் வியாக்கியானப்படுததி அதையே சமூக, பொருளாதார அரசியல் விஞ்ஞான, கலாசாரத் துறைகளுக்குரிய அடித்தளமாக்குவதே நமது நோக்கமாகும். எல்லாத் துறைகளிலும் அந்தக்கருத்தை, அந்தச் சத்தியத்தை எழச்செய்வதே நமது இலட்சியமாகும் - சர்வோதயம்

பின்வருவனவற்றை அத்தகைய சர்வோதய எழுச்சிக்குரிய அடிப்படைத் தேவைகளாகவும் அம்சங்களாகவும் நாம் கருதுகிறோம்.

விஞ்ஞானரீதியான சமயப்பார்வை சர்வமத ஐக்கியம்

சாதி ஒழிப்பு

இன, மொழி எல்லைகளைக்கடந்த சகோதரத்துவம், வர்க்கங் கடந்த சமூக சமத்துவம்;

பொதுவுடமைப் பொருளாதாரமும் கருத்துச் சுதந்திரத்துக்கு இடமளிக்கும் பொதுவுடமை அரசியலும் பிரதேச சுயாட்சியும்.

கலை, இலக்கிய, கல்வி, விஞ்ஞான கலாச்சாரத் துறைகளில் பிரபஞ்ச யதார்த்தப் புரட்சியும் ஆக்கமும். பேர்மனவிரிவும் தெய்வீகப் பெருமனித வாழ்க்கையும.

இவற்றுக்கே புதிய 'சத்தியம் பத்திரிகை இன்று தொடக்கம் தன்னை அர்ப்பணிக்கிறது.

★ சர்வோதய பொதுவுடமைக் குரல் ★

# பழையதும் புதியதும்

பழைய 'சத்தியம்' இதழ்களின் சாதனைபற்றியும் அது ஆதரித்த சர்வோதய அரசியல் முன்னணியின் சாதனைபற்றியும் ஓர் கணக்கெடுப்பு நடத்துவது நல்லது. ஆனுல் அதை விரிவாகக் கூறுவதற்குரிய காலம் இன்னும் வரவில்லை. சுருக்கமாகவும் பொதுப்படையாகவும் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

சர்வோதயத்துக்காக ஜீவதானம் செய்த சிலரும் அவர்களது ஆதரவாளர்களும் வேறுபல தீவிரமிக்க இளைஞர்களும் பெரியார்களும் நமது அரசியலில், முக்கியமாக தமிழ்ப் பகுதி அரசியலில், சத்தியத்தைப் புகுத்த எடுத்த ஆரம்ப முயற்சியின் விளைவுதான் சர்வோதய அரசியல் முன்னனியாகும். அந்த முயற்சிக்குத்தான் பழைய 'சத்தியம்' பத்திரிகை ஆதரவளித்தது.

ச. அ. மு. எந்த முற்போக்கான கருத்துக்களை அரசியலில் ஆதரிக்க விரும்பினதோ அதே கருத்துக்கள் வடபகுதியில் தோற்ருலும் கூட இலங்கை முழுதும் இன்று வென்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் ச. அ. மு யின் தலைவர் திரு. ப. கதிரவேலுவுக்கு ஏற்பட்ட தோல்வியுங்கூட மறைமுகமான வெற்றியாகும். எப்படி காங்கேசன்துறையில் திரு. வி. பொன்னம்பலத்தின் தோல்வியும் வெற்றியாகவிருக்கிறதோ அந்த வகையில் திரு. ப. கதிரவேலுவின் தோல்வியும் வெற்றியாகவே முடிந்துருக்கிறது. இன்னுமொரு வழியிலும் அவர்கள் இருவரது நிலையும ஒத்திருக்கிறது. எவ்வாறு காங்கேசன்துறையில் திரு. வி. பொன்னம்பலம் திரு. சுந்தரலிங்கத்தைத் தோற்கடித்திருக்கிருரோ அவ்வாறேதீவுத்தொகுதியில் திரு. ப கதிரவேலு திரு. வி.நவரத்தினத்தைத் தோற்கடித்திருக்கிருர். நடைமுறையிலுள்ள தமிழரசுக்கட்சி -காங்கிரஸ் அரசியல் சூழலிருந்து தப்புவதற்கு முற்போக்கான வழியைக் காட்டாமல் அவற்றைவிடப் பிற்போக்கு வழியைக் காட்டுபவர்களாகவே திரு. சுந்தரலிங்கமும் திரு. நவரத்தினமும் இருக்கின்றனர். அவர்களது பிற்போக்கு வழியை வென்றவகையிலும் ச. அ. மு. திருப்திப்படக் கூடிய சாதனையை ஈட்டியே இருக்கிறது.

இருப்பினும் தவறுகளும் இருக்கவே செய்கின்றன. அரசியலில் சத்தியத்தைப் புகுத்த நாம் எடுத்த முயற்சி ஏற்கனவே நமது சமூகத்திலும் தனிப்பட்டவர்களிடத்திலும் நிலவிய சிறுசிறு விருப்பு வெறுப்புக்களை நல்ல வழியில் ஆற்றுப்படுதத முயன்ற அதே வேளையில் சிலவிடங்களில் அதற்கு அதிகமாக அதே விருப்பு வெறுப்புக்களால் விழுங்கப்பட்டுமிருக்கிறது. அது உண்மை. அதையும் ஒப்புக்கொள்கிருேம். ஆனுல் அந்தத் தவறுகள் ச. அ. மு. யின் நிலையை மாற்றக் கட்சிகளின் நிலையைவிட மோசமானதாக ஆக்கவில்லை என்பதையும் மறந்துவிடக் கூடாது.

சர்வோதய அரசியல் முன்னணி இன்று கலைக்கப்பட்டுவிட்டது. நம்மைப் பொறுத்த வரையில் அதுஒரு குறிப்பிட்டகாலக் கட்டத்துக்குரிய சத்தியசோதனையாகும். அதனுல் பெறப்பட்ட பாடங்களையும் அனுபவத்தையும் மூலதனமாகக் கொண்டு நாம் இன்று அடுத்த கட்டத்துககு போகிருேம்.

ச. அ, மு யில் சேர்ந்திருந்த பலர் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்து விட்டனர். நாடெங்கும் முற்போக்கான அரசியல் சூழல் உருவாகியிருக்கும் இன்றைய நிலையில் தனித்து நின்று இயங்குவதைவிட பொதுப்போக்கோடு ஒன்றிநின்று ஆதரவளிப்பது நல்லது என்று அவர்கள் கருதுகின்றனர். அதுவும் நல்ல வழியேதான். அதேபோல் இன்னும் தீவிரமானவர்கள் சிலர் பொதுவுடமைக்கட்சியில் (மொஸ்கவ்) சேர்ந்துள்ளனர்.

### சர்வமதசங்கமும் பொதுவுடமைக் கட்சியும்

அந்தத் தீவிரவாதிகள் பக்கமாகவே நாம் நிற்கிருேம். நாம் விரும்பும் சத்திய எழுச்சிக்குரிய திசையில் நமது நாட்டினதும் உலகத்தினதும் சமூக, பொருளாதார, அரசியல் கலாசார அமைப்பை தீவிரமாக மாற்றி வளர்க்க முயலும் அரசியல் கட்சி அதுவாக இருப்பதால் நாம் அதற்கே ஆதரவளிக்கிருேம்.

இருப்பினும் நாம் விரும்பும் புரட்சியும் சத்திய எழுச்சியும் அவர்களுக்கும் வழிகாட்டக் கூடியவை. காலப்போக்கில் எல்லாக் கட்சிக்காரரையும் மதத்தினரையும் ஈர்க்கக் கூடியவை. அதனுல் ச. அ, முன்னணியை உருவாக்குமுன் நாம் எந்தச் சங்கத்தின் பெயரில் இயங்கினுேமோ அந்தச் சங்கத்துக்குரிய இதழாகவே புதிய 'சத்தியம்' பத்திரிகை வெளிவருகிறது. இனிமேல் அவ்வாறே தொடர்ந்து வெளிவரும்: சர்வமத சங்கம் (சர்வோதய இயக்கம்)

### சர்வமத சங்கம்:

சர்வமத சங்கம் நல்லவை எல்லாவற்றுக்கும் ஆதரவளிக்கும்; உலகத்தினதும் பிரபஞ்சத்தினதும் நம் நாட்டினதும் சமூகத்தினதும் இன்றைய யதார்த்தத்துக்குரிய சத்திய பரிணுமப் போக்கு எவ்வாறு இருக்கிறதோ அந்தப் போக்குக்குத் தீவிரமாக ஆதரவளிப்பவையே நல்லவை என்றும் அவற்றைத் தடுத்தும் எதிர்த்தும் நிற்பவற்றையே கூடாதவை என்றும் சர்வமத சங்கம் கருதுகிறது.

'சத்தியம்' அந்த நல்லவை கூடாதவற்றை இனிமேல் ஒவ்வொரு இதழிலும் விளக்கிக்காட்டும். சத்திய யுகத்துக்குரிய போர்ப் பறையை எழுப்பும். சத்திய யுகத்தை நிலைநாட்ட உதவும்.

# ஐ. மு. அரசாங்கத்தை எதற்காக நாம் ஆதரிக்க வேண்டும்?

### அர்ச்சுணத் தயக்கம்:-

குருஷேத்திரத்தில் போரிடுவதற்குத் தயாராய் நின்ற அர்ச்சுணன்திடீரென்று மனம்சோர்ந்து போகிருன்.

"இது என்னபோர்! எதற்காக இந்தப்போர்? இந்தப் போரால் அண்ணன் தம்பிமார் அழியாரா? மரபு கெட்டுப்போகாதா? பெண்கள் கற்பை இழக்கார்களா? சமூகத்தின் ஒழுங்கான வாழ்வு குலையாதா?" என்று கலக்கமுற்றுக் கண்ணனைக் கேட்கிருன். அவனுக்குப் போரே வேண்டாமென்று போகிறது. அவன் பயந்துவிட்டான்.

இன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் நோக்கங்களையும் சாதனைகளையும் பற்றி அவசரப்பட்டு கணக்கெடுக்க முயன்ருல் அல்லது சில தவிர்க்க முடியாத பிழையான ஆரம்ப அறிகுறிகளை வைத்துக் கொண்டு சந்தேகத்தோடும் பயத்தோடும் கணக்கெடுக்க முயன்ருல் குருஷேத்திரத்தில் அர்ச்சுணன் செய்த ஆரம்ப தவறைத்தான் நாமும் செய்வோம். நமது கணக்கெடுப்பு முழுப்பிழையாக அமைவதுடன் அந்தப்பிழையான கணக்கெடுப்பு மூலம் நாமே புதியஅரசாங்கத்தின் போரையும் புரட்சியையும் தோற்கடிப்பவர்களாகவும் மாறிவிடுவோம்.

### ஈஸ்வரபணி:-

முதலில் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது ஒன்றிருக்கிறது. நாட்டிலும் உலகத்திலும் இன்று தேவைப்படும் சில அடிப்படை வளர்ச்சி மாற்றங்களை இரத்தம் சிந்தாமலேயே மிகத் துரிதமாகக் கொண்டு வருவதற்கு தன்னைப் பூரணமாக அர்ப்பணித்திருக்கிறது நமது ஐ. முன்னணி அரசாங்கம் அந்த அர்ப்பணிப்பை நாம் அவதானிக்கவேண்டும். ஒரு நாடும் அதன் அரசாங்கமும் அந்த நாட்டுப் பொதுமக்களின் மனச்சாட்சியின் தூண்டுதல்களுக்கும் இலட்சிய வேட்கைக்கும் தங்களைத் தீவிரமாக அர்ப்பணித்திருக்கின்றனவென்ருல் அந்த அர்ப்பணிப்பிலும்அதற்குரியசெயல்களிலும் நாம் இறைவனின் தூண்டுதலையும் தெய்வப்பணியையும் காணவேண்டும். நாட்டுப் பொதுமக்களின் மனச்சாட்சிக்கும் அதன் இலட்சிய வேட்கைக்கும் தன்னை அர்ப்பணிக்கும் ஓர் அரசாங்கம் இறைவனின் பணியையே செய்ய முயல்கிறது. கீழ்வட்டமக்களைத் தூக்கிவிட்டு, நசுக்கப்பட்டவர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் எழுப்பிவிட்டு அரசியல் துறையில் மட்டுமல்ல பொருளாதார சமூகத் துறைகளிலும் சம அந்தஸ்த்தையும் சமதர்மத்தையும் கொண்டுவர முயலும் சோஸலிசப் பணியைவிட தெய்வப்பணியும் இறைவனின் தர்மமும் வேறு எது இருக்கிறது?

இறைவனின் பணியில் ஈடுபடும்போது ஆரம்பக்கஷ்டங்களும் ஆபத்துக்களும் ஏற்படலாம். ஆனுல் அதற்காக அர்ச்சுணனைப் போல் பயந்துவிடக்கூடாது. சோர்ந்து விடக்கூடாது. சோர்ந்து கலங்கிப்போய் போலித் தர்மம் பற்றிப் பேசக்கூடாது. அது போராட்டத்தைக் கடத்தும் பேச்சாகவே இருக்கும். அது போராட்டத்தைக் கடத்திச் சிதைக்கும் கணக்கெடுப்பாகவே முடியும்.

### ஒத்துழைப்பு அவசியம்:-

எனவே முதலில் செய்யவேண்டியது தீவிர ஒத்துழைப்புத்தான் தீவிரமாகஒத்துழைத்துக் கொண்டுதான் கணக்கெடுப்பை நடத்த வேண்டும். விலகிவிடுபட்டு ஒத்துழைக்காமல் நின்று சந்தேகப்படுவதும் கணக்கெடுப்பு நடத்துவதும் பிழையாகும். நீ நல்ல வழியைக் காட்ட முடியுமானுல், உனக்கு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைவிடத் தரமான தீவிரமான சோஸலிசம் தெரியுமானுல் உன் எண்ணங்களும் இலட்சியங்களும் செயல்படுவதற்கு இதைவிடச் சிறந்த அரசியல் சமூகச் சூழல் வேறு கிடைக்குமா? எனவே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நீ பூரணமாக ஒத்துழைப்பை நல்கி அதன் மூலமே அரசாங்கத்தை நல்ல வழியில் தீவிரமாக ஆற்றுப்படுத்தி உன் ஆத்மீக சர்வோதய சோஸலிசத்தை நிறுவமுயலவேண்டும். ஐ. மு. அரசாங்கம் பாஸிஸ அரசாங்கமாக மாறுமானுல் அதற்குரிய பொறுப்பு அரசாங்கத்தில் மட்டும் விழாது. உன்னைப்போல் விசயம் தெரிந்த தீவிரவாதிகள் உட்புகுந்து பொறுப்பேற்று ஒத்துழைக்காமல் தவறிழைத்தால் பழியும்பொறுப்பும் உங்கள் தலையிலுந்தான் விழும். தர்மத்தை வளர்க்காமல், வளரவிடாமல் தடுத்த பொறுப்பும் பழியும் உன்னுடையதாகி வரும். அதற்கு நீ தயாரா?

### பாஸிஸமா சோஸலிஸமா?

ஐ. முன்னணி அரசாங்கத்தின் ஆரம்பத் தவறுகள் பாஸிஸப் போக்குக்கு வழிவகுப்பதாக நீ பயப்பட்டால் உடனே நீ அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்து அதிலுள்ள முற்போக்குச் சக்திகளின் பலத்தைப் பெருக்கி அரசாங்கத்தை உண்மையான சோஸலிஸ வழியில் ஆற்றுப்படுத்த வேண்டும். அதைச் செய்யாமல் பின்தங்கி விடுபட்டு ஒத்துழைக்காமல் நின்ருல் நீ தெரிந்திருந்தும் அரசாங்கத்தைத் தவறிழைக்கச் செய்கிருய் என்று அர்த்தமாகும். அல்லது அரசாங்கம் கவிழ்க்கப்படுவதற்கும் உதவுகிருய் என்று அர்த்தமாகும். ஐ. மு. அரசாங்கம் தோற்றுக் கவிழ்ந்தால் அமைதியையும் சமாதானத்தையும் போற்றுவது போல் போற்றி தங்களது வர்க்க ஆதிக்கத்தையும் சமூக பொருளாதாரத் தேக்கத்தையும் சுரண்டலையும் மூடி மறைக்கும் பிற்போக்கு யூ. என். பி சக்திகளுக்கே உதவுவதாக முடியும். நீ எதைச் செய்ய விரும்புகிருய்?

முற்போக்கு சோஸலிஸத்தைநீ விரும்புகிருயென்ருல் உடனே அரசாங்கத்துடன் தீவிரமாக ஒத்துழைத்துக்கொண்டு கணக்கெடுப்பை நடத்து. ஒத்துழைக்காமல் எதைச் செய்தாலும் தவறுதான் செய்யப்படும்.

### தமிழர்களின் உரிமைகள்:-

தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்று நீ கருதினுல் அந்தப் போராட்டத்தை நாட்டினதும் உலகத்தினதும் சமூக சமத்துவத்துக்கும்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

---

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை நாம் ஆதரிப்பதற்குரிய காரணத்தை எல்லாரும் சீராக விளங்கிக் கொள்ளவில்லை. அந்த நிலையில் அரசாங்கத்தை ஆதரிக்கவேண்டும் என்று விரும்பிய தீவிர சர்வோதய சோஸலிஸவாதி ஒருவரே அண்மையில் ஆரம்ப நம்பிக்கையை இழந்து சில சந்தேகங்களை எழுப்பியிருந்தார்.

- அரசாங்கம் வாக்குறுதிகளை அளித்திருக்கிறது; அதே வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாய் இல்லை.
- தொழிலாளர்கள் என்ற பெயரில் ஒழுங்கற்ற வாழ்க்கையை விரும்பும் குண்டர்களையொத்த தெருவாசிகளுக்கும் சுயநல விரும்பிகளுக்கும் தீயசக்திகளுக்கும் ஆதரவளிக்கிறது.
- ஐக்கிய முன்னணிக் கட்சிகளுக்கிடையே திரைமறைவில் பலப்பரீட்சையும் போட்டியும் நடைபெறுகிறது.
- குடியரசு அமைப்பும் அரசியல் நிர்ணயசபையும் அவசரத் தேவைகளல்ல; அவை வெறும் கண்துடைப்பு வேலைகள்.
- சோஸலிஸப் பாதையா பஸிஸப் பாதையா?
- தமிழர்களின் உரிமைகள் கிடைக்குமா?

என்பவை அவற்றுள் முக்கியமானவை. அவற்றுக்குப் பதிலளிக்கும் விதத்தில், ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை 'சத்தியம்' எதற்காக ஆதரிக்கிறது என்பதைப் பொதுப்படையாக இங்கு விளக்க முயன்றிருக்கிருேம்.

— ஆசிரியர்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

## அடிமைப் பெண்

மீகப் பிரச்சனைகளோடேயோ பொருத்திப் பார்க்க விருபுவதில்லை. அவற்ருேடு பொருத்தி அவற்றிலிருந்து பெறக்கூடிய பலத்தைத் தங்களின் போராட்டத்துக்குப் பெறமுயல்வதில்லை. காரணம் இவர்கள் எல்லாரும் சேரர், பாண்டியர், சோழர் காலத்துப் பழமையைக் கனவு காண்பவர்களாகவும் சமூக பொருளாதாரத் துறைகளில் தொடர் வளர்ச்சியற்ற ஸ்தம்பிதத்தையே அவற்றின் இயல்பான பண்பாகக் காண்பவர்களாகவுமே இருக்கின்றனர். அதனல் பிறதுறைகளைப் பற்றி அவர்கள் அக்கறைப் படுவதே இல்லை என்றுகூடச் சொல்லாம். இந்தவகையான கட்டுப்பெட்டித்தனத்தால் தமிழ்ச்சமூகம் தேங்கிப் பழுதாகி உழுத்துக் கொண்டே வருகிறது. காலத்துக்குக் காலம் அதைமாறறிச்சீராக்க விரும்பிய ஆறுமுகநாவலர் போன்ற பெரியார்கள்கூட சமூகத்தின் எல்லாத்துறைகளிலும் சமமான அக்கறைகாட்டியதில்லை. (தன்னளவில் அந்தவித அக்கறை காட்டிய இராமலிங்க சுவாமிகளை நாவலர் எதிர்த்தாரேயொழிய அவரோடு கூட்டுச் சேர்ந்ததில்லை). அதனல் அவர்களின் சீர்திருத்தமும் காலப்போக்கில் தோற்கடிக்கப்பட்டு விட்டன. அல்லது வெல்ல வேண்டிய அளவுக்கு வெல்ல முடியாமல்போய்விட்டன. இன்றும் நாம் கோயில் கதவுகளைத் திறந்து விடுவதா இல்லையா என்று சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறோம். இன்றுங்கூட தேனீர்கடைகளில் சமபந்தி இருத்துவது நமக்கு புதினமாகத்தான் இருக்கிறது. இந்நிலையில் தி-மு-க. வும் எம்- ஜி- ஆர்- சினிமாப்புராணமும் நமது இளைஞர்களில் பெரும்பாலானேருக்குப் புதுமதமாகவும் புரட்சியாகவும் தெரிவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லைத்தான்; அது அவர்களின் குற்றமல்லத்தான். ஆனல் தியேட்டருக்குள்ளிருந்து மூன்ருந்தரத்திற்கும் தேருத கலைசேராச் சினிமா எழுப்பும் (சினிமா மிக அவசியம்; கலையோடு இருப்பதும் அதேயளவுக்கு அவசியம்) கூட்டுக் கனவிலும் ''காட்போட்' கடவுளர் வளிபாட்டிலும் தி-மு-க- அடுக்கு வசனத்திலும் தமிழினத்தின் பரிதாப நிலையை மறக்கலமேயொழிய அவற்ருல் அதை மறுகக்வோ மறைக்கவோ முடியாது'

அவள், தமிழிச்சி, அடிமைப் பெண்ணுகவே கிடக்கிருள்.

அப்படியென்ருல் அவளின் விடுதலைக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டும் முயற்சிகள் இல்லை என்ரு அர்த்தம்? அல்லது அப்படிப்படிப்பட்ட முயற்சிகள் இதுவரை எடுக்கப்படாமல் இருக்கிறதென்ரு அர்த்தம்?

அப்படியல்ல. வளர்ச்சி என்பது இனித்தான் வரவேண்டுமென்றில்லை. அல்லது அடிமைத்தனம் என்பது விடுதலையை நோக்கிய முயற்சியற்ற பூரணமான ஸ்தம்பிதம் என்றுமில்லை விடுதலைக்கும் வளர்ச்சிக்குமுரிய முயற்சிகள் காலங்காலமாய் இருந்துவரத்தான் செய்கின்றன, சிலகாலங்களில் அவையே பூரணமாக சமூகமெங்கும் பரவலாக ஆட்சி நடத்தியதுமுண்டு. ஆனல் இன்று அவை மறைக்கப்பட்டே கிடக்கின்றன. பழைய கட்டுப்பெட்டித் தேக்கமும் அவற்றின் சாயல் செறிந்த இன்றய தமிழ் அரசியல்கட்சிகளும் (தமிழரசு காங்கிரஸ்) சீர்கெட்ட மரபும் நல்லமுயற்சிகளை மறைத்துக்கொண்டு நிற்கின்றன. அவற்ருேடு அந்தப்பழமைக்குப் பதிலாக எழுந்த போலிப்புரட்சியும் போலிச் சீர்திருத்முமான சினிமாக்கனவும் காட்போட்கடவுளரும் நிற்கின்றனர். போலிப்புரட்சிக்கு உதாரணமக தமிழர் சு கழகத்தை சொல்லலாம். இந்த சீர்கெட்ட மரபின் கட்டுப்பெட்டித்தனமும் போலிப்புரட்சியும் சேர்ந்து தமிழை வளர்ப்பதாகவும் விடுவிப்பதாகவும் கூறிக்கொண்டு அவளை தேக்கிச் சிறைப்பிடிக்கவே முயல்கின்றன, அதனல் நம் அடிமைப்பெண்ணை விடுவிக்க முயலும் புதுயுக சீர்திருத்த வாதிகள் இரண்டுவகையான ''போலி'' களிலிருந்து தங்களை இனம்பிரித்துக்காட்டவேண்டி இருக்கிறது. அவர்களை எதிர்த்துப் போராடி அவர்களைச் சீரான வழியில் ஆற்றுப்படுத்த வேண்டி இருக்கிறது.

ஒன்று, பழமை என்றும் மரபு என்றும் பேசி பழமையையும் மரபையும் பழுதாக்கி வரும் கட்டுப்பெட்டி வைதீகங்கள். அவர்களுக்கு உதாரணமாக' கந்த புராணத்தோடும் பழயபல்லவர்காலத் தேவார திருமுறைகளோடும். தமிழும் சமயமும் நின்று விட்டதென்று நினைக்கும் சைவத்தமிழ்ப் பிரியர்களையும் சமூக, பொருளாதார, சமயத் துறைகள் கலக்காத அரசியல் பார்வையுடைய தமிழரசாரையும் தமிழ்க்காங்கிரசாரையும் கூறலாம்.

இரண்டு, புதுமை என்றும் புரட்சி என்றும் பேசி புதுமையையும் புரட்சியையும் விற்பனைக்குரிய கடைச்சரக்காக வும் அறிவற்ற உணர்ச்சிக் கொந்தளிப்புக்குரிய சுலோகங்களாகவும் விரக்தியையும் இயலாத்தன்மையையும் மறப்பதற்குரிய அடுக்கு வசனங்களாகவும் சினிமாக் கூட்டுக் கனவாகவும் மாற்றிவரும் காட்போட் கடவுளர் வழிபாடும் தலைவர் வழிபாடும் கழகவழிபாடும். இந்தரகத்தினருக்கு உதாரணமாக கருணநிதி முதல்மந்திரியாக வருவதற்கு முந்திய காலத்துத் தி. மு.க. வாதிகளையும் இன்றுவரையுள்ள எம் ஜி- ஆர். சினிமாப்பிரியர் களையும் பீட்டில்ஸ் ஹிபீஸ்ரக ''அவுட்சைடர்களையும்'' இன்னும் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் அன்பர்களையும் கூறலாம்.

நம் அடிமைப்பெண்ணை விடுவித்து வளர்க்க விரும்பும் ஒவ்வொருவரும் இந்த இரண்டு சாராரிலிருந்தும் தங்களைப் பிரித்துக் காட்ட வேண்டியவர்களாகவும் அவர்களுக்கு எதிராக இயங்கி அவர்களையும் தங்கள் பக்கம் இழுத்து ஆற்றுப்படுத்த வேண்டியவர்களாயும் இருக்கின்றனர்.

[இதுபோன்று சிந்தனைக் குரிய கட்டுரைகள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப் படுகிறது.]

## சிந்தனைக்குச் சில

நதி கடலை நோக்கிப்
பாய்ந்து கொண்டு இருப்பதுபோல்
இறைவா, நான் உன்னை நோக்கிப்
பயணம் வந்துகொண்டே இருப்பேனுக.

......

பயணங்களில் பெரியது
கடவுளை நோக்கிப் போகும் பயணம்
அது பல கற்பகாலமாக
நிகழ்ந்துகொண்டே இருக்கலாம்,

பின்பு, பயணங்களுள் மிகக் குறிகியதும்
கடவுளை நோக்கிப் போகும் பயணமே
அது நொடிப்பொழுதிலும்
பூர்த்தியாகி விடலாம்
அதெல்லாம் அவரவர் மனதைப்பொறுத்தது.

உலகில் உள்ளது எல்லாம்
அவனைத்தவிர வேறு ஒன்றும் இல்லை

...

காயாசம், தாடி, கமண்டலம் ஏந்தி
தெருவில் திரிவதல்ல தெய்வீகம்
இல்லானும் இல்லாளும்
இறைவனுக்கொப்ப நடப்பார்களானுல்
அதுவே துறவாம்
ஆனந்தமாய் அகத்தே அகத்தில்
அடையவிருக்கும் ஆத்மீகஞானத்தை
அலைந்து அடையலாம் என்பது மடமை

......

மனக்கொதிப்பு அடங்கினுல்
மனிதா,
உனக்கும் எனக்கும் உள்ளதொடர்பு
உள்ளபடி விளங்கும்.

— ந- கோ- கி

சிலபல பொருளைச் சேர்ப்பதைவிட்டு
உலகையே ஆள ஆசை வைப்பாயே
உலகையே ஆள ஆசை வைத்தாயா?
உலகளவாக உனைவிரிப்பாயே!

— காளி

3-ம் பக்கத தொடர்ச்சி

## ஐக்கிய முன்ன....

பொருளாதாரப் பொதுவுடமைக்கும் சமதர்மத்துக்கும் இடையூறு செய்யும் விதத்தில் நடத்தலாமா?

தமிழர்களின் போராட்டம் நமது நாட்டினதும் உலகத்தினதும் சமதர்மப் பொதுவுடமைப் போராட்டத்துக்கும் ஆத்மீக எழுச்சிக்கும் சர்வோதயத்துக்கும் உதவும் வகையிலேயே நடத்தப்படவேண்டும். அவற்றுக்கு முட்டுக் கட்டைபோடும் போராட்டமாக இருக்கக்கூடாது. பொது நன்மைக்குப் பல சக்திகள் ஐக்கியப்பட்டு உதவும்போது அதற்கு நீயும் உனது பூரண ஒத்துழைப்பை நல்கி அதன் மூலம் பெறப்படும் நல்லெண்ணத்தைக் கொண்டே உனது இனத்தினது உரிமைகளையும் பெறவேண்டும். சிங்களச்சட்டம் ஏற்கனவே வந்துவிட்டது. அதை நீக்கவேண்டுமானுல் மக்களின் மனம் மாறவேண்டும். அந்த மனமாற்றத்துக்குப் பொதுவுடமை அமைப்பும் சர்வோதய எழுச்சியும் அதிகமாக உதவும். தமிழரசுக்கட்சியினது பிழையான குறுகிய போராட்டங்களும் தமிழர் சுயாட்சிக் கட்சியின் அர்த்தமற்ற பிரசாரங்களும் தமிழர்களுக்கு உதவப்போவதில்லை. அவர்கள் அரசியல் குருடர்கள். காலப்போக்கில் அவர்களுக்கும் கண் திறக்கும். அப்போது உங்களையே அவர்களும் பின்பற்றுவார்கள். அதனுல் இப்போது அவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் அரசாங்கத்துடன் ஒத்துழை. பாஸிஸ அரசாங்கம் வந்தாலுங்கூட மனச்சாட்சிக்குத் துரோகம் செய்யாமல் நீ ஒத்திழைத்திருந்தால் நீதான் உண்மையாக அதை எதிர்த்துப் போராடுவதற்கும் நல்ல வழிகாட்டுவதற்கும் உரிமையுடையவனுய் இருப்பாய்.

எனவே தயங்காமல் ஒத்துழை. சும்மா ஒத்தோடாதே. மனச்சாட்சிக்குத் துரோகம் செய்யாமல் ஆக்கரீதியாக ஒத்துழை. அப்படி ஒத்துழைப்பவர்களே நாட்டையும் அரசாங்கத்தையும் நல்ல வழியில் ஆற்றுப்படுத்துபவர்களாக இருப்பார்கள். அவர்களே ஈஸ்வரபணியைச் செய்பவர்களாய் இருப்பர்.


வட மாகாண மக்களைத் தினமும்
மகிழ்ச்சியில் ஆழ்த்துபவை
சந்திரா ஐஸ்கிறீம் சந்திரா ஐஸ்பார்
சந்திரா ஐஸ்ஜொலி சந்திரா ஐஸ்பழம்
சுவைத்து மகிழுங்கள்
தயாரிப்பாளர்கள்:
சந்திரா ஐஸ்கிறீம்
108, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

## மாவிட்டபுரத்தில் நாம்

யும் பெரிதாகப்போற்றிக்கொண்டு பத்திரிகைகளுக்கு அறிக்கைவிடுக்கும் குருக்கள்மாரும் கோட்டில் வழக்குத் தொடரும் தலைவர்களும் கோயில் முதலாளிமார்களும் நம் மனதிலும் சமூகத்திலும் சர்வாதிகாரம் செய்ய நாம் இடமளித்துவிட்ட அந்தப் பிற்போக்குக் கும்பகர்ணத் தாமத குணச் சக்திகளினதும் அவற்றுக்கு ஆதரவளிக்கும் பிற்போக்கு இராவணீய இரஜதகுண ஆணவச் சக்திகளினதும் உருவங்களேதான்.

நம் மனச்சாட்சியையும் சமூகத்தின் மனச்சாட்சியையும் வீதியெல்லாம் இழுத்துச் சித்திரவதை செய்து கொன்று வரும் இந்தப் பிற்போக்குச் சக்திகளைப் பார்த்து நாம் பேசாமல் இருக்கிறோம். ''வீரமிலா நாய்கள்'' என்று திரௌபதையின் வேதனையைப் பார்த்திருந்த பொதுமக்களைப் பற்றிப் பாரதியார் கூறினரே அத்தகைய வீரமிலா நாய்கள்தான் நாங்கள்.

''நெட்டை மரங்களென நின்று புலம்பினர்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணை யாமோ?''

உலகம் என்ன கூறுகிறது?

சாதி வெறியரின் அக்கிரமங்களையும் அவற்றைப் பார்த்து நாம் விடுக்கும் கையாலாகாத்தனப் பெட்டைப் புலம்பலையும் பார்த்து உலகமனச்சாட்சி இன்று கேலி செய்கிறது; எள்ளி நகையாடுகிறது.

''அரசியலில் சர்வசன வாக்குரிமை மூலம் எல்லாருக்கும் சம அந்தஸ்துக் கொடுத்தாகிவிட்டது. சமூகத்தின் கீழ்நிலையிலுள்ள எல்லா மக்களையும் மேலே தூக்கிவிட்டு அதிகமானோருக்கு அதிக நன்மையை அளிப்பதே முக்கிய நோக்கமாகக்கொண்டு அரசாங்கங்கள் . இயங்கி வருகின்றன. அதனுல் தங்களை நலன்புரி அரசாங்கம் என்று நாமம் சூட்டி அழைத்துக் கொள்கின்றன. எல்லா மக்களுக்கும் சமமாக, இலவசமாக வைத்தியவசதி, கல்விவசதி ஆகியவற்றைக்கூடச் சில நலன்புரி அரசுகள் வழங்குகின்றன. அவை கூடப் போதாதென்று சமூக, பொருளாதாரத் துறைகளிலும் எல்லா மக்களும் சமமாக வாழ வேண்டுமென்று சிலநாடுகளில் பொதுவுடமை அரசுகளும் எழுந்துவிட்டன. அவ்விதம் மனிதன் உருவாக்கிய அரசுகளே நலன்புரி அரசுகளாகவும் பொதுவுடமைச் சமதர்ம அரசுகளாகவும் வளர்ந்துவிட்ட இந்தக் காலத்தில் உங்கள் ஆலயங்களும் நீங்கள் வணங்கும் இறைவனும் இன்னும் நலன்புரியாத இறைவனுகவும் சமதர்மத்துக்கு எதிரான ஆலயங்களாகவும் இருக்கின்றனவே என்ன விந்தை! உலகத்தின் மனச்சாட்சியைவிட உங்கள் இறைவனின் மனச்சாட்சி சின்னனுக இருக்கிறதே! நல்ல இறைவனும் பக்தர்களுமப்பா நீங்கள்!'' என்று உலகம் நம்மைக் கேலி செய்கிறது.

இந்தக் கேலிக்கு எதிராக நமது சாதிவெறியர்கள் வேதத்தைக் காட்டுவார்கள், தர்மசாஸ்திரங்களைக் காட்டுவார்கள். கர்மபலன் என்று கூறுவார்கள்,

வேதமும் தர்மசாஸ்திரங்களும்:-

இனி நாம் வேதத்திடமும் தர்மசாஸ்திரங்களிடமும் வருவோம், சுருதியிடமும் ஸ்மிருதியிடமும் வருவோம்,

நமது மன்ச்சாட்சியின் குரலைவிட, உலக மனச்சாட்சியின் குரலைவிட வேதம் கூறும் உண்மைபெரிதாக இருக்குமா சிறிதாக இருக்குமா?

பெரிதாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் வேதமே நமக்குத் தேவையில்லை.

அப்படியென்றுல் வேதம் கூறும் உண்மை பெரிதாகவே இருக்கிறதா அல்லது நமது சாதிவெறியர்கள் கூறுவது போல் சிறிதாக குறுகலாக, அதனுல் தேவையற்ற பொய்யாக இருக்கிறதா?

பெரிதாக இருக்கிறது. என்றுமே பூரணமாக அளந்து காணமுடியாத பேருண்மையாக இருக்கிறது. அது அளந்து காணமுடியாத பேருண்மையாக இருக்கிறதென்றுல் எவ்வாறு நமது சாதிவெறியர்களின் ஆதாரமாக இருக்கும்? சாதிப்பாகுபாடுகளை எதற்காக அது அனுமதித்தது?

இங்குதான் வேதத்துக்கும் தர்மசாத்திரங்களுக்கு மிடையேயுள்ள வித்தியாசத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். வேதம் இறைவனின் குரல். பேரருளான பேருண்மை, வேதமே இறைவன்தான். ஆனுல் தர்மசாஸ்திரங்களோ அந்தப் பேருண்மையான இறைவனின் குரலை நோக்கி மனிதமனம் எடுக்கும் வளர்ச்சியின் குரல். வளர்ச்சியின் பாதைகள். இறைவனின் குரலுக்கும் மனிதமனச்சாட்சியின் குரலுக்குமுள்ள தொடர்பும் வித்தியாசமுந்தான் வேதத்துக்கும் தர்மசாஸ்திரங்களுக்குமுள்ள தொடர்பும் வித்தியாசமுமாகும். சுருதி இறைவன்; ஸ்மிருதி இறைவனை நோக்கி வளரும் மனித மனச்சாட்சி.

எது வேதம்? எது தர்ம சாஸ்திரம்? எது சுருதி, எது ஸ்மிருதி? 'அதுவேநீ' 'சர்வமும் பிரம்மமே' என்ற மகாவாக்கியங்கள் தான் வேதம். அந்த மகாவாக்கியங்கள் கூறும் உண்மைதான் வேதம். இன்றைய மனச்சாட்சிப்படி அப்படித்தான் எடுக்கவேண்டும். மற்றவையெல்லாம் அந்த வேதத்தை விளக்கமுயலும் உப அங்கங்களும் புராணங்களும் தர்ம சாத்திரங்களுந்தான்.

வேதம் சாதிப் பாகுபாட்டைச் சட்டமாக்கியதில்லை. தர்மசாஸ்திரங்கள்தான் சட்டமாக்கிற்று. ஆத்மாவும் பிரம்மமும் ஒன்றேதான் என்றும் சர்வமும் பிரம்மமேதான் என்றும் கூறும் வேதம் எப்படிப் பிரிவினைகளையும் பாகுபாட்டையும் வலியுறுத்தும்? எப்படிநிரந்தரமாக்கும்?

ஆனுல் மனித மனம் அந்த உண்மையை நோக்கி வளர்வதற்காக, அந்த உண்மையை அனுபவித்து அதுவாகவே தானும் இருப்பதற்காக சில சம்பிரதாயங்களையும் சட்டங்களையும் வகுத்துக்கொள்கிறது. அவையே தர்மசாஸ்திரங்களாக நிற்கின்றன. ஆனுல் அவை நிரந்தரமானவையல்ல. மனச்சாட்சி அவற்றையும் கடந்து வளர்ந்துவிட்டால் அவை காலங்கடந்தவையாய் மாறிவிடுகின்றன. மாற்றியமைக்கப்படுகின்றன,

எது இன்றைய தர்மசாஸ்திரம் ?

இன்றைய மனித மனச்சாட்சி சாதிப்பாகுபாடுகளைத் தேவையற்றதாகக் காண்கிறது. வேதத்தை நோக்கி வளரும் இன்றைய மனித்மனச்சாட்சிக்கு உதாரணமாக காந்தியின் குரலைவிட வேறு எதைக் காட்டலாம்.?

. இறைவனுக்கு விட்டுக் கொடுக்கும் தனது மனச்சாட்சியின் குரலுக்கு அடிபணிந்து சாதிப் பாகுபாட்டுக்கு எதிராக உண்ணுவிரதமிருந்து ஆயிரம் ஆயிரம் ஆலயங்களின் கதவுகளைத் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் திறந்து விடத்தூண்டிய மகாத்மா காந்தி அந்த விடயத்தில் பழைய தர்மசாஸ்திரங்களைப்பற்றிக் கவலைப்படவில்லை இறைவனுக்குத் தன்னையே அர்ப்பணித்துவிட்ட தனது மனச்சாட்சியைப்பற்றித்தான் கவலைப்பட்டார். அந்த மனச்சாட்சி சாதிப் பாகுபாடுகளை வன்மையாகக் கண்டித்தது. ஆலயப்பிரவேசத்தை தீவிரமாக ஆதரித்தது.

அப்படிப்பட்ட பெரியோர்களின் வாழ்க்கை வரலாறும் அவர்கள் காட்டும் வாழ்க்கை முறையுந்தான் என்றுமுள்ள வேதத்தை விளக்கும் இன்றைய தர்மசாஸ்திரங்களாகும் இன்றையஸ்மிருதி. அவர்களை விட மேலான பெரியார்கள் வந்து காட்டாதவரைக்கும் சமூகத்தின் இன்றைய தர்மசாஸ்த்திரங்களாக அவர்களது கூற்றுக்களே விளங்குகின்றன.

காந்தி போன்ற பெரியார்களா அல்லது வவுனியாச் சுந்தரலிங்கம் போன்ற அரசியல் வாதிகள்ா இன்று தேவைப்படும் வேத தர்மத்தை விளக்கும் உருவங்கள்? எவர் முருகன்? எவர் சூரன்? மாவிட்டபுரத்தில் நாம் கதவடைத்து விழா எடுக்கும் போது நாம் யாருக்கு விழா எடுக்கிறோம்? முருகனுக்கா சூரனுக்கா? நாம் சூரனுக்குத்தான் விழா எடுக்கிறோம். அதாவது மேற்சாதி ஆணவச் சூரனுக்கே விழா எடுக்கிறோம்.

சினிமாவும் சமூகமும்

# அடிமைப் பெண்

யாழ்ப்பாண பஸ்நிலையத்துக்கு முன்னுலுள்ள ராணித்தியேட்டரின் முகப்பில் கோபுரம் போன்ற காட்போட் உருவம் ஒன்று கொஞ்சக் காலமாக ஏற்றப்பட்டு நின்றதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். சினிமா நடிகர் எம். ஜி ராமச்சந்திரனின் வீர வேடப் படம். ''அடிமைப் பெண்'' என்ற படத்தில் அந்த நடிகர் காட்சியளிக்கும் தோற்றத்தில் பழைய படைவீரன் உடையுடன் கையில் வாளொன்றுடன் அவர் நிற்கிறுர். அந்தப்படத்தை நிறுவிய ஆரம்பகாலத்தில் அதற்குமுன்னுல் நின்று அண்ணுந்து பார்த்து கழுத்துழைந்து போனவர்கள் பலர். ''அடிமைப் பெண்'' ஓடத் தொடங்கிய ஆரம்பநாளில் அங்கு ஏற்பட்ட நெருக்கடியும் சண்டையும் சொல்லமுடியாது. அத்துடன் 'எம். ஜி. ஆர்'' படத்தின் ஆரம்பத்தை வெடிகொழுத்தி ஐஸ்பழம் இனுமாக வழங்கி அவரது தாஸர்கள் கொண்டாடினுர்கள். அது அடிக்கடி ஏற்படும் வழக்கமாகும். எம். ஜி. ராமச்சந்திரன் நடித்து வெளிவரும் படங்கள் எப்படியாய் இருந்தாலும் அவரே ஒரு புராணமாகி விட்டார். அவரது சினிமா வாழ்க்கையே, அதாவது சினிமாவில் அவர் நடித்த கதைநிகழ்சிகழும் அவரது தனிப்பட்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளும் இணைந்து ஒரு பெரும் புராணமாக வளர்ந்து பல தமிழ் மக்களது வாழ்க்கையில் கலந்துவிட்டது இன்று. அதனுல் அவர் உடுப்பது போல், அவர் நடப்பதுபோல் பலர் உடுக்கின்றனர் பலர் நடக்கின்றனர். ஜெயகாந்தன் எழுதிய கதையொன்றில் வந்ததுபோல் அவரையே சதா நினைத்து வாழும் ஆண்களும் பெண்களும் இன்று பலர் இருக்கின்றனர். பல தமிழர்கள் இன்று தொழுது கொண்டாடும் தெய்வங்களுள் சினிமாத் தெய்வங்கள் முக்கியமானவர்கள். அவர்களில் ராமச்சந்திரன் ஒரு தனித் தெய்வம். அவதாரம்! கல்கிஅவதாரம் இன்னும் பிறக்கவில்லை என்றும் அதுபிறக்காது என்றும் ஆஸ்திகர்களும் நாஸ்திகர்களும் போட்டிபோட்டுக் கொள்ளலாம் ஆனுல் அவர் எப்போதோ பிறந்து விட்டார். அவர்தான் இந்த ராமச்சந்திரன். கலியுகத்தில் அவதாரமுங்கூட காட்போட்தான் போலும். கலியுகம் பிஸ்சினஸ்யுகமுங்கூட. அதனுல் அவதாரத்ததைக்கூட காசு கொடுத்து டிக்கட் வாங்கித்தான் பார்க்கவேண்டியிருக்கிறது. இருந்தாலும் அதற்கு இருக்கிற சக்திமுந்திய எந்த அவதாரத்துக்கும் இருந்ததில்லை. திரையில் அவர் எழுப்பும் உருவங்களே எத்தனை எத்தனை பக்தர்களை மெய்மறக்கச் செய்து விடுகின்றன. அந்த நிலையில் காட்போட்டில் கோபுரமாய் நின்றுல் கழுத்துழையப் பார்க்கமாட்டார்களா?

இருந்தாலும் எம்- ஜீ- ராமச்சந்திரனிலும் குறைகூறமுடியாதுதான். இலட்சியத்துக்காக வாழவும் மாளவும் தயாராய் இருக்கும் இன்றய தமிழ் இளைஞருக்கு வழிகாட்டக்கூடிய தலைவர்களோ தத்துவமோ இல்லாத போது வேறு வழியின்றி அவர்கள் செய்ய விரும்புவதைச் சினிமாவில் காணமுயல்கிறுர்கள். அதற்கு ராமச்சந்திரன் உதவுகிறுர். அந்தநிலையில் நம் இளைஞர்களையோ அல்லது ராமச்சந்திரனையோ எப்படிக் குறை கூறலாம்?

குறைகூறவேண்டுமானுல் நமது சமூகத்தையும் கலாசாரத்தையும் பொருளாதார அமைப்பையும் கட்டுப்பெட்டிகளாக வைத்திருக்க விரும்பும் வைதீகங்களைத்தான் குறைகூறவேண்டும். தமிழினத்துக்கு ஒரு தனி மரபு இருக்கிறது, ஒரு தனிக்கலாச்சாரம் இருக்கிறது என்று கூறுபவர்கள் அந்தமரபையும் கலாச்சாரத்தையும் காலத்துக்கேற்ற விதத்தில் வளர்க்க முயன்றதில்லை. அவற்றைக் கட்டுப்பெட்டியாகவே வைத்திருக்க விரும்பினர்; வைத்திருந்தனர், இன்னும் வைத்திருக்கவிரும்புகின்றனர். இந்த வைதிகப்பார்வை உதாரணமாக இன்று எல்லாத்துறைகளிலும் மறைமுகமாக ஆட்சி நடத்திக்கொண்டே இருக்கிறது. இன்றைய ஈழத்தமிழினத்தின் உரிமைப் போராட்டத்துக்குத் தலைமைதாங்கும் அரசியல்வாதிகள் இந்த வைதீகக் கட்டுப்பெட்டித்தனத்தின் தற்காலத்தோற்றங்களாகவே நிற்கின்றனர். தமிழ், தமிழ், என்று கூச்சலிடும் அவர்கள தமிழினத்தின் மொழிப்பிரச்சனையை அதே இனத்தின் சமூக, பொருளதாரப் பிரச்சனைகளோடோ அல்லது முழுநாட்டினதும் உலகத்தினதும் சமூக' பொருளாதார, அரசியல் ஆத்

தொடர்ச்சி 3-ம் பக்கம்